**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண்.000002/எச்.1/2021** **நாள் : 16.07.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2020–2021ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடுதல் – தொடர்பாக.

------

2020–2021ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடுதல், மதிப்பெண் பட்டியல் (Statement of Marks) வழங்கும் நாட்கள் குறித்த தகவல்கள் அடங்கிய செய்தி குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சி / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

"**இது விளம்பரம் அல்ல**" எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/-
**இயக்குநர்**

**இணைப்பு.** செய்திக்குறிப்பு

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.</u>**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, 2020–2021**
**<u>தேர்வு முடிவுகள் வெளியிடுதல்</u>**
**செய்திக்குறிப்பு**

அரசாணை (நிலை) எண்.105 பள்ளிக் கல்வித் (அ.தே) துறை, நாள்.12.07.2021–ன்படி, 2020–2021ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள், **19.07.2021 அன்று காலை 11.00 மணிக்கு வெளியிடப்படுகிறது.** பள்ளி மாணவர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகளை கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையதளங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

1. www.tnresults.nic.in
2. www.dge1.tn.nic.in
3. www.dge2.tn.nic.in
4. www.dge.tn.gov.in

மாணவர்கள், பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியாகவும் தேர்வு முடிவு அனுப்பி வைக்கப்படும்.

மேலும், பள்ளி மாணவர்கள் **22.07.2021 அன்று காலை 11.00 மணி முதல்** www.dge.tn.gov.in, www.dge.tn.nic.in என்ற இணையதளங்களில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து தங்களுக்கான மதிப்பெண் பட்டியலை தாங்களே பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஒம்/-
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
**நாள்: 16.07.2021.**